## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

---

*[1990 மே மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990, மே மாதம் 18 ஆந் தேதியஇலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

[1990, மே மாதம் 15 ந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ 31/89

**அரசியலமைப்பின் 154 ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை தொடர்பாகவும், மேல்நீதிமன்றத்துக்கும் மேல்நீதிமன்றத்திலிருந்தும் மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமை தொடர்பாகவும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்கள் தொடர்பாகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்ற (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (1) இலங்கை மேல்நீதிமன்றத்தின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தினைப் பிரயோகிப்பது தொடர்பாகவும் அத்தகைய மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாகவும் ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 154 ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்— **மேல் நீதிமன்றத்தின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கை முறை.**

(அ) அம் மேல்நீதிமன்றத்தில் (யூரர் சபை மூலமான விளக்கங்கள் அத்துடன் யூரரில்லா விளக்கங்கள் உட்பட) வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுவதற்கும் விளக்கங்களுக்கான நடவடிக்கை முறைகளுக்கும் ;

(ஆ) அம் மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தீர்ப்புகள், குற்றத் தீர்ப்புகள், கட்டளைகள் அல்லது தண்டனைத் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமைக்கும் ;

(இ) அம் மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தீர்ப்புகள், குற்றத்தீர்ப்புகள், கட்டளைகள் அல்லது தண்டனைத் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கும்,

ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

2—டீ 007578 (01/90)

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கும் ஏதேனும் வழக்கு, வழக்குத்தொடுப்பு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம், வேறேதேனும் நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்படுவதற்கு ஏற்புடைத்தான நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், மாகாணமொன்றுக்கென அரசியலமைப்பின 154ஞ உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதி மன்றத்தின் முன்னர் முடிவுறுதிருக்கும் ஏதேனும் வழக்கு, வழக்குத்தொடுப்பு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம், அவ்வுறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்படுவது தொடர்பில், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவ்வதிகாரத்தை அவமதித்துப்புரியப்பட்ட அவமதிப்புத் தவறுகளுக்கு ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தொழில் நியாய சபைகளிலிருந்தும் கமநலச் சேவைகள் சட்டத்தின் கீழான கட்டளைகளிலிருந்தும் வரும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கு மேல் நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கம்.*

3. மாகாணமொன்றுக்கென அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று, ஏதேனும் சட்டத்துக்கு அமைய, அம்மாகாணத்துக்குள் இருக்கும் தொழில் நியாய சபைகளினால் ஆக்கப்படும் கட்டளைகள் தொடர்பிலும் அம்மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனும் காணி தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 5 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைகள் தொடர்பிலும், மேன்முறையீட்டு அத்துடன் மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

*மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை.*

4. நீதிவான் நீதிமன்றமொன்றினால், ஆரம்ப நீதிமன்றமொன்றினால், தொழில் நியாய சபையொன்றினால் வழங்கப்படும் அல்லது விதிக்கப்படும் ஏதேனும் குற்றத்தீர்ப்பினால், தண்டனைத்தீர்ப்பினால் அல்லது கட்டளையினால் அல்லது 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையினால் இன்னலுறும் கட்சிக்காரர் ஒருவர், மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறைக்கும், விதத்துக்கும் ஏற்புடைத்தான எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அத்தகைய மேன்முறையீடுகள் செய்யப்பட வேண்டியகால அவகாசத்துக்கும் அமைய, அந்நீதிமன்றம் அல்லது நியாய சபை அல்லது கமநலச் சேவைகள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கு விடயப்பொருளாக இருக்கின்ற காணி, எம்மாகாணத்துக்குள் அமைந்துள்ளதோ, அம்மாகாணத்துக்கென அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு, அவற்றிக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறை.

5. நீதிவான் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புகள், தண்டனைத் தீர்ப்புகள் அல்லது கட்டளைகள் ஆகியவற்றிற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும், அத்துடன், அத்தகைய ஏதேனும் குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது கட்டளையை மீளாய்வு செய்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கும் ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154கு என்னும் உறுப்புரையினால் மாகாண மொன்றுக்கெனத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு, அம்மாகாணத்தினுள் உள்ள நீதிவான் நீதிமன்றங்களினால், ஆரம்ப நீதிமன்றங்களினால் அத்துடன் தொழில் நியாயசபைகளினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புகளுக்கெதிராக, தண்டனைத் தீர்ப்புகளுக்கெதிராக அல்லது கட்டளைகளுக்கெதிராக அத்துடன், அம்மாகாணத்தினுள் அமைந்துள்ள காணி தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச்சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கெதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும், அத்துடன், அத்தகைய ஏதேனும் குற்றத்தீர்ப்பை, தண்டனைத் தீர்ப்பை அல்லது கட்டளையை, மீளாய்வுசெய்வதற்காக அத்தகைய மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்துக்கும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

மேன்முறையீட்டின் மீது மேல நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்கள்.

6. (அ) அரசியலமைப்பின் 154கு என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று அரசியலமைப்பினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத் தீர்ப்பைச் சட்டத்திற்கிணங்க உறுதிப்படுத்தலாம், எதிர்மாறுக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது முதனிலை நீதிமன்றம், தொழில் நியாயசபை அல்லது நிறுவனம் எதற்கும் பணிப்புரைகளை வழங்கலாம் அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல், புதிய விளக்கமொன்றுக்கு அல்லது மேல் விசாரணைக்குக் கட்டளையிடலாம்.

(ஆ) மேல்நீதிமன்றம், விடயத்தின் நீதி தேவைப்படுத்தக் கூடியவாறு, ஏதேனும் மூலவழக்கில், துடர்ச்சியில், வழக்குத் தொடுப்பில் அல்லது நடவடிக்கைகளில் ஆய்நிகழ்விலுள்ள விடயங்கள் பற்றி முதனிலை நீதிமன்றத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட சான்றுக்கு மேலதிகமாக அல்லது அதற்குக் குறைநிரப்பியாக புதிய சான்றை மேலும் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் அனுமதிக்கலாம்.

மேல் நீதிமன்றத்தின் எழுத்தாணை நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கை முறை.

7. அரசியலமைப்பின் 140 ஆம், 141 ஆம் உறுப்புரைகளினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டி, அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்தியினால் அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டி அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

அடிப்படை உரிமைகளையும் மொழி உரிமைகளையும் மீறல் தொடர்பான வழக்குகளை உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதல்.

8. (1) அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒன்றில், ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்செல்லென்றெழுத்தாணை, விதிப்பாணை அல்லது உரிமை வினாப் பேராணை என்ற வகையிலான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றின் விசாரணையின்போது, அத்தகைய விண்ணப்பத்துக்கான திறத்தவரொருவரினால் அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தின் அல்லது IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் மீறல் ஒன்றுக்கான அல்லது ஏற்படக்கூடிய மீறல் ஒன்றுக்கான முதற்றோற்றச் சான்று உண்டு என அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து, அத்தகைய நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதற்கென அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் ஆற்றுப்படுத்துகை தொடர்பில் சூழ்நிலைகளில் நீதியானதும் ஒப்புரவானதுமென உயர் நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புரைகளை விடுப்பதற்கு உயர் நீதிமன்றம் தத்துவமுடையதாதல் வேண்டும், அல்லது, அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை மீறல் அல்லது மொழி உரிமை மீறல் எதுவும் இல்லையெனில் அவ்விடயத்தை அத்தகைய மேல்நீதிமன்றத்துக்கு திரும்ப ஆற்றுப்படுத்துவதற்கு அது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான ஆற்றுப்படுத்துகையொன்றை, அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள், உயர் நீதிமன்றம் விசாரித்து, இறுதியாக முடிவுசெய்தல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் மேல்நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தல்.

9. இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய—

(அ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று முக்கிய சட்டப் பிரச்சினையொன்றை உள்ளடக்குகின்ற (குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ்சரி)

ஏதேனும் விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், வழங்கிய இறுதிக் கட்டளையொன்றினால், தீர்ப்பொன்றினால், தீர்வையொன்றினால் அல்லது தண்டனைத் தீர்ப்பொன்றினால் இன்னலுற்ற ஆளெவரும், உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு மேல்நீதிமன்றமானது தன்னியக்கத்தால் அனுமதி வழங்கினால் அல்லது அத்தகைய விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இன்னலுற்ற எவரேனும் திறத்தவரின் வேண்டு கோளின்பேரில், அதற்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம் ;

ஆயின், அத்தகைய மேல் நீதிமன்றமானது, உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ள விடத்து அல்லது வழக்கு அல்லது விடயம் உயர் நீதிமன்றத்தினால் மீளாய்வு செய்யப்படுவதற்குத் தகுந்ததென உயர் நீதிமன்றம் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அத்தகைய மேல்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை அது பிரயோகிக்கையில் அதனால் வழங்கப்பட்ட ஏதேனும் இறுதிக்கட்டளைக்கு அல்லது வழக்கிடைக் கட்டளைக்கு, தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு, உயர் நீதிமன்றமானது அதன் தற்றுணிபின்பேரில் விசேட அனுமதி வழங்கலாம்;

ஆயின், மேலும், எவ்விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் முடிவுசெய்யப்படவேண்டிய பிரச்சினை பொதுமக்கள் நலன் வாய்ந்தது அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்தது என உயர் நீதிமன்றம் திருப்திப்படுகின்றதோ, அவ்விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் மேன்முறையீடு செய்வதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையில் (3) (அ) என்னும் பந்தியினால் அல்லது 4 ஆம் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், வழங்கப்பட்ட இறுதிக்கட்டளை, தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்பு ஒன்றினால் இன்னலுற்ற ஆளெவரும் அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

மேன்முறையீட்டின் மீது உயர் நீதி மன்றத்துக்குள்ள தத்துவம்.

10. (1) உயர்நீதிமன்றம், அரசியலமைப்புக்கு அமைய, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றினால், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்

தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாய யாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், புரியப்படும் நிகழ்வுப்பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்காக இலங்கைக்குள் மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட இறுதி நீதிமன்றமாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா விடயங்களிலும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் இறுதியானவையும் முடிவானவையுமாதலும் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றினால், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் 3 (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன் முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஆக்கப் பட்ட ஏதேனும் கட்டளைக்கு, தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்படும் மேன்முறை யீட்டின்மீது பூரண புறநீங்கலான நீதிமுறைச் செயலாட்சி கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அத்தகைய ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத் தீர்ப்பை அது உறுதிப்படுத்தலாம், நேர்மாறுக்காலம், அல்லது வேறுபடுத்தலாம் அத்துடன் அத்த கைய மேல் நீதிமன்றத்துக்கு அல்லது முதனிலை நீதிமன்றத் துக்கு அத்தகைய பணிப்புகளை வழங்காலம் அல்லது விடயத்தின் நீதி தேவைப்படுத்தக் கூடியவாறு எவையேனும் வழக்கு நடவடிக்கையில் புதிய ஒரு விசாரணை நடத்துமாறு அல்லது மேலும் விசாரிக்குமாறு கட்டளையிடலாம்; அத்துடன், நீதிநலன் அவ்வாறு தேவைப்படுத்தினால், புதிய அல்லது மேலதிகமான சான்றளிக்குமாறு கேட்கலாம் என்பதுடன் அத்தகைய சந்தர்ப் பத்தில், அத்தகைய சான்று அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால் பதியப்படவேண் டுமென்றும் பணிக்கலாம்.

**மேல் நீதிமன் றத்திலிருந்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தல்.**

11. (1) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய , அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக் கப்பட்ட ஏதேனும் மேல் நீதிமன்றத்தினால், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் (3) (அ) என்னும் பந்தியின் அல்லது (4) ஆம் பந்தியின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் புரியப்படும், நிகழ்வுப்பிழைகள் அல்லது சட்டப்பிழைகள் எல்லாவற்றின்மீதும் மேன்முறையீட்டு நியாயா திக்கம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அதைப் பிரயோ கித்தலும் வேண்டும், அத்துடன், அத்தகைய மேல் நீதிமன்றம் கவனத்துக்கெடுத்திருக்கக்கூடிய எல்லா வழக்குக் காரணங்கள், தொடர்ச்சிகள், வழக்குகள், வழக்குத் தொடுப்புகள், விடயங்கள் அத்துடன் கருமங்கள் மீது, மேன்முறையீடு மீளாய்வு, தொன் னிலைமீட்பு என்றவகையில், பூரண புறநீங்கலான நீதிமுறைச் செயலாட்சி கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய மேல் நீதிமன்றம் எதனதும் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை எதுவும், திறத்தவர்களின் பெருமளவிலான உரிமைகளைப் பங்கப்படுத்தாத அல்லது நீதித்தவறுகையை ஏற்படுத்தாத ஏதேனும் பிழை, குறைபாடு அல்லது ஒழுங்கீனம் காரணமாக நேர்மாறுக்கப்படுதலோ அல்லது வேறுபடுத்தப்படுதலோ ஆகாது.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், சட்டத்திற்கிணங்க, கட்டளை, தீர்ப்பு, தீர்வை அல்லது தண்டனைத் தீர்ப்பு எதையும் உறுதிப்படுத்தலாம். நேர் மாறுக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப் பட்ட மேல் நீதிமன்றம் எதற்கும் பணிப்புரைகள் வழங்கலாம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீது, புதியதொரு வழக்கு விசாரணை நடத்தும்படி அல்லது மேலும் வழக்கு விளக்கம் நடத்தும்படி கட்டளையிடலாம்.

(3) விடயம் தொடர்பில் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறு ஏதேனும் மூல வழக்கில், தொடர்ச்சியில், வழக்குத் தொடுப்பில் அல்லது வழக்கில் பிரச்சினைக்குரிய விடயங்கள் தொடர்பில், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப் பட்ட ஏதேனும் மேல் நீதி மன்றத்தினால் ஏற்கனவே பெறப்பட்ட சான்றுடன் மேலதிகமாக அல்லது அதற்குப் குறைநிரப்பியாக புதியசான்றை மேலும் பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் அனுமதிக்கலாம்.

12. (அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் எதுவும் கோப்பிடப்பட்டு, அத்துடன் அரசியலமைப்பின் 154ஞ என்னும் பந்தியினால் அல்லது (4)ஆம் பந்தியினால், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றுக்கு உரித்தாக்கப் பட்டுள்ள நியாயாதிக்கத்தை வேண்டி அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் கோப்பிடப்படுவதற்கு அனுமதிக்கப் பட்ட காலவரையறைக்குள் அந்நீதிமன்றத்தில் அதேவிடயம் தொடர்பில் மேன்முறையீடொன்று அல்லது விண்ணப்பமொன்று கோப்பிடப்பட்டு அத்துடன், அத்தகைய மேன்முறையீட்டின் மீது அல்லது விண்ணப்பத்தின் மீது அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் வழக்கு விளக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்காத விடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிக்கத் தொடங்கலாம், அல்லது, அவ்வாறு செய்வது உசிதமென அது கருதினால், அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிக்கும்படி அத்தகைய மேல் நீதிமன்றத்தைப் பணிக்கலாம்.

ஒரேவிடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் மேல்நீதி மன்றத் திலும் மேன் முறையீடு அல்லது விண்ணப்பம் கோப்பிடப்படுமிடத்து.

ஆயின், எவ்வாறுயினும், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கத்துக்குள் வரும் மேன்முறையீடு அல்லது விண்ணப்

பம் எதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டிருக்குமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அவ்வாறு செய்வது உசிதமானதென அது கருதினால், அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை அத்தகைய மேல்நீதிமன்றத்துக்கு மாற்றும்படி கட்டளையிடலாம், அத்துடன் அத்தகைய மேல் நீதிமன்றம் அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் எதையும் விசாரித்துத் தீர்மானிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்யுமிடத்து, மேல் நீதிமன்றத்தில் முடிவுறுதிருக்கும் வழக்கு நடவடிக்கைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதன் தீர்மானத்துக்கென மாற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் அல்லது மேல்நீதிமன்றமொன்றுக்கு அதனை மாற்றுவதற்கும் இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுக்கெதிராக மேன்முறையீடெதுவும் இருத்தலாகாது.

(ஈ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றுக்கு, அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தை அத்தகைய மேல் நீதிமன்றம் பிரயோகிக்கையில் அதனால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடு எதையும் விசாரித்துத் தீர்மானிப்பதற்கெனப் பண்ப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தத்துவமளிப்பதாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

செல்லுபடியாக்கல்.

13. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் ஆரம்பிக்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது—

(அ) அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றில், அவ்வுறுப்புரையின் 3 (அ) என்னும் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் தொடுக்கப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகளும், அத்துடன் அப்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் அல்லது கொள்ளப்பட்ட பிரயோகத்தில், அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை ஒவ்வொன்றும்;

(ஆ) அத்தகைய குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை எதற்கும் எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் எல்லா மேன்முறையீடுகளும்;

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான ஏதேனும் மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும்,

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதியிலிருந்து நடைமுறையில் இருந்திருக்கின்றன என்றும்போன்று செல்லுபடியானவையாகவும் பயனுள்ளவையாகவும் இருந்திருக்கின்றனவாகவும் அத்துடன் இருக்கின்றனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே, ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெருநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.